மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(10) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

151. தேசிய வேலைவாய்ப்புப் பணியிலுள்ள 'காம்டிஸ்ட்' பணியை அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பு எல்லைக்குள் கொண்டு வருவதன் பொருட்டு தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வணைக் கழக விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் நிர்வாகச் சீர் திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு M) 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8-ந் தேதியிடப்பெற்ற அரசாணை எண், 256-ல் வெளியான அறிவிப்பு.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*185. பொதுப்பணித் துறை (கட்டிடப் பிரிவு) பணிகள் பற்றிய ஆய்வுரை, 1978–79 (தமிழ், ஆங்கிலம்).

**186. கோரிக்கை எண். 43—சிறு சேமிப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1979–80 (தமிழ். ஆங்கிலம்)

***187. 1972–73 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

***188. 1972–73 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

***189. 1973–74 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

1979 ஏப்ரல் 24]

***190, 1973-74 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்),

@191, மாண்புமிகு திரு, கி, மனோகரன். நிதி அமைச்சர், 1972-73 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவு மானியக் கோரிக்கைகளைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

@192. மாண்புமிகு திரு, கி, மனோகரன். நிதி அமைச்சர் 1973-74 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவு மானியக் கோரிக்கைகளைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

---

*20.3.1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.
**21.3.1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.
***23.3.1979 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றன.
@ 23.3.1979 அன்று உறுப்பினர்களுக்கு அவையில் வழங்கப்பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS